# கிராமிய சேவைத் திட்டம்

**திருச்சி மண்டலம்**
**பெரம்பலூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை**
**நெற்குணம் கிராமம்**




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# திருச்சி மண்டலம்
# பெரம்பலூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# நெற்குணம் கிராமம்

## Contents

1. செயல்பாட்டு அறிக்கை....3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்....4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்....4

4. நெற்குணம் கிராமத்தின் தொடக்கவிழா....5

5. மருத்துவ முகாம்....7

6. மனநல ஆலோசனை முகாம்....7

7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்....7

8. மது ஒழிப்பு முகாம்....8

9. அனுபவ உரை....9

10. எதிர்காலத் திட்டங்கள்:....15

11. வாழ்த்து:....15

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | **நெற்குணம்** | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **30-04-2024** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **06-10-2024** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5 மாதங்கள்** | | |
| 5. | மண்டலம் | **திருச்சி** | | |
| 6. | அறக்கட்டளை | **பெரம்பலூர்** | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | ***SKY YOGA CENTRE, DUBAI*** | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | *ஆண்:189* | *பெண்:197* | *மொ:386* |
| 9. | **கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள்** | ***ஆண்:102*** | ***பெண்:255*** | ***மொ:357*** |
| 10. | **காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை** | ***ஆண்:85*** | ***பெண்:248*** | ***மொ:333*** |
| 11. | **தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை** | ***ஆண்:85*** | ***பெண்:248*** | ***மொ:333*** |
| 12. | **முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்** | ***ஆண்:29*** | ***பெண்:81*** | ***மொ:110*** |
| 13. | **இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்** | ***ஆண்:26*** | ***பெண்:75*** | ***மொ:101*** |
| 14. | **மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்** | ***ஆண்:22*** | ***பெண்:70*** | ***மொ:92*** |
| 15. | **பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள்** | ***ஆண்:22*** | ***பெண்:46*** | ***மொ:68*** |
| 16. | **உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)*** | ***ஆண்:28*** | ***பெண்:59*** | ***மொ:87*** |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் **பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன்** அவர்களால் **330-**வது கிராமமாக **நெற்குணம்** கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் **30.04.2024-**ஆம் தேதியிலிருந்து **06.10.2024-**ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. நெற்குணம் கிராமத்தின் தொடக்கவிழா

***SKY Yoga Centre, Dubai*** *நிதி உதவியுடன்* ***திருச்சி மண்டலம், பெரம்பலூர்*** *மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக* ***30.04.2024****-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* ***பத்மஸ்ரீ.அருள்நிதி. SKM. மயிலானந்தன்*** *அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்* ***நெற்குணம்*** *கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*









**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**





## 5. மருத்துவ முகாம்

*30.06.2024 அன்று நெற்குணம் கிராமத்தில் **Dr.Bhuvaneshwari and Lions Club** மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-85, பெண்கள்-299, மொத்தம்-384 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 6. மனநல ஆலோசனை முகாம்

*06.07.2024 அன்று **Dr.Bhuvaneshwari** அவர்களால் நெற்குணம் கிராமத்தில் **மன நல ஆலோசனை முகாம்** நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மொத்தம் 35 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 15 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*





## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்

*11.12.2023 நெற்குணம் கிராமத்தில் **Dr.Bhuvaneshwari & பெரம்பலூர் அறக்கட்டளை** பொறுப்பாளர்கள் கிராம மக்களுக்கு 150 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*






## 8. மது ஒழிப்பு முகாம்

**15.07.2024** அன்று நெற்குணம் கிராம மக்களுக்கு ***Dr.Bhuvaneshari,, Mr.Neru, Mr.Raja, AAA*** அமைப்பினர் அவர்களால் மதுஒழிப்பு முகாம் நடத்தப்பட்டது. கிராம மக்கள் மொத்தம் 26 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





## *9. சர்வதேச யோகா தினம்*

*21.06.2024 அன்று நெற்குணம் கிராமத்தில் சர்வதேச யோகா தினம் நடத்தப்பட்டது. இதில் மாணவ மாணவியர்கள் மற்றும் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*





## *10. மனைவி நல வேட்பு தினம்*

*23.07.2024 அன்று நெற்குணம் கிராமத்தில் மனைவிநல வேட்பு தினம் நடைபெற்றது. இதில் 25 தம்பதியர்கள் மற்றும் 64 பேர் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*






9. அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | Around 97% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 2 | 95% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 3 | 95% of the students participants are good in studies and other activities (School/College) |
| 4 | 94% of the participants of the people now keep the village cleaner than before |
| 5 | 94% of the participants are able to control their anger |
| 6 | 93% of the participants are out of the depression compared to before joining the program |
| 7 | 90% (321) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation- 71 participants cured of Joint Pain, 48 participants cured of Migraine and Headache, 36 participants cured of Ulcer, 48 participants cured of Over-weight / Obesity, 36 participants cured of Sugar Problem & Asthma Breathing Problem, 60 participants cured of Blood pressure, 24 women participants cured of Menstrual problems / PCOD. |
| 9 | **Around 98% of the participants are happy with the VSP Programme compared to only 34% before joining the program** |

## Feedback Trend





வணக்கம்,

வாழ்க வளமுடன்

எனது பெயர் ஹேமலதா.பா வயது 27.
எனக்கு முதுகுவலி, தலைவலி, constipation
ஆகிய பிரச்சனை உள்ளது.
இதனால் மன உளைச்சல் ஏற்பட்டது.
உடல் எடை அதிகரித்தது.
எங்கள் ஊருக்கு மே மாதம் மனவளக்கலை
ஆசிரியர்கள் பயிற்சி, தியானம் இலவசமாக
நடத்தினர்.
நான் மாலை வேளை மட்டும் பயிற்சி
மற்றும் தியானம் விடாமல் செய்தேன். இப்போது
நான் ஆரோக்கியமாக உள்ளேன். உடல்
எடை வாரம் 1kg குறைந்தது. மருத்துவ
செலவு இல்லை.
இந்த பயிற்சி தந்த குரு வேதாத்திரி
மகரிஷிக்கு நன்றி

வாழ்க வளமுடன்,
இப்படிக்கு,
B. Hemalatha.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்

குருவே துணை



வணக்கம்.

வாழ்க வளமுடன்

என் பெயர் P. பத்மாவதி வயது 50.
எனக்கு உடலில் 5 operation செய்ததால்,
முதுகு தண்டு வலி, தலை வலி, இடுப்பு வலி,
கால் வலி ஆகிய பிரச்சனை இருந்தது.
என்னால் அதிக நேரம் வேலை செய்ய முடியாது.
எங்கள் ஊருக்கு மனவளக்கலை ஆசிரியர்கள்
பயிற்சி, தியானம் இலவசமாக தந்தனர்.
நான் இருவேளையும் பயிற்சி, தியானம்
தவறாமல் செய்தேன்.
இப்போது எனக்கு இருந்த அனைத்து
வலியும் சரியாகி விட்டது, என்னால் வேலை
இயல்பாக செய்ய முடிகிறது. இந்த பயிற்சி தந்த
குரு வேதாத்திரி மகரிஷிக்கு நன்றி

வாழ்க வளமுடன்.
இப்படிக்கு,
P. Padmavathi.

வாழ்க வையகம்

வாழ்க வளமுடன்

குருவே துணை



அன்புள்ள வணக்கம்,

என் பெயர் வசந்தன்.ரா. வயது 23 எனக்கு தூக்கம் இல்லை பிரச்சனை இருந்து வந்தது சில காலங்களாக. எப்போது நான் எங்கள் ஊருக்கு வந்த (yoga) பயிற்சி மையத்திற்கு சென்று ஆசிரியர்கள் உதவியின் மூலம் குரு ராஜா மற்றும் திருமதி உமாராஜா அவர்களில் பயிற்சியின் மூலம் நான் இப்போது நலமாக நன்றாக இருக்கிறேன்.

இந்த பயிற்சியை தந்த குரு வேதாத்திரி மகரிஷிக்கு நன்றி

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு

R. Vasanthan

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை



அன்புடையீர் வணக்கம்,

வாழ்க வளமுடன்

என் பெயர் B.M.நிவேதா வயது 21.

எனக்கு இரண்டு வருடங்களாக இடுப்பு வலி, தூக்கமின்மை, உடல் சோர்வு இருந்து வந்தது. எங்களது ஊரில் கடந்த இரண்டு மாதங்களாக மனவளக்கலை ஆசிரியர்கள் பயிற்சி, தியானம் இலவசமாக கொடுத்தனர். நான் பயிற்சியில் கலந்துகொண்டு தினமும் தவறாமல் பயிற்சி, தியானம் செய்து வந்தேன். இப்போது நான் என்னுடைய உடல் ஆரோக்கியத்தில் நல்ல மாற்றங்களை உணர்கிறேன். மனநிம்மதி கிடைத்தது. இந்த பயிற்சியை தந்த நமது குரு வேதாத்திரி மகரிஷிக்கு மனமார்ந்த நன்றி.

வாழ்க வளமுடன்
இப்படிக்கு
நிவேதா
(B.M.நிவேதா)

Scanned with OKEN Scanner

வாழ்க வளமுடன்

வாழ்க வையகம்

குருவே துணை



அன்புடையீர் வணக்கம்,

வாழ்க வளமுடன்

என் பெயர் பெ. ராமசாமி, வயது 61.

எனக்கு இரண்டு, மூன்று வருடங்களாக கொழுப்புச்சத்து, கை, கால் வலி இருந்து வந்தது. எங்களது ஊரில் கடந்த 2 மாதங்களாக மனவளக்கலை ஆசிரியர்கள் பயிற்சி, தியானம் இலவசமாக கொடுத்தனர். நான் அதில் கலந்து கொண்டு தினமும் தவறாமல் பயிற்சி, தியானம் செய்து வந்தேன். இப்பொழுது நான் என்னுடைய உடலில் நல்ல மாற்றங்களை உணர்கிறேன். கொழுப்புச்சத்து நன்றாக குறைந்துள்ளது. இந்த பயிற்சியை தந்த நமது குரு வேதாத்திரி மகரிஷிக்கு மனமார்ந்த நன்றி!

வாழ்க வளமுடன்,
இப்படிக்கு.

P. ராமசாமி

(பெ. ராமசாமி)

Scanned with OKEN Scanner

## 10. எதிர்காலத் திட்டங்கள்:

*ஆரோக்கியமும், அமைதியும் மிக்க* **நெற்குணம்** *கிராமம்,* **பெரம்பலூர் மனவளக்கலை** *மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.*

## 11. வாழ்த்து:

**நெற்குணம்** *கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* **பத்மஸ்ரீ.அருள்நிதி**.SKM.**மயிலானந்தன்** *அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய* ***SKY Yoga Centre, Dubai-க்கும்,*** *இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த* **திருச்சி** *மண்டல பொறுப்பாளர்களுக்கும்,* **பெரம்பலூர் மனவளக்கலை** *மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள்* ***Asst. Prof.T.Raja & Asst. Prof. N. Uma*** *அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய* ***VSP*** **நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு** *உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.*

**உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை**
**உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.**
**உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே**
**உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.**

**-வேதாத்திரி மகரிஷி**

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*